அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 166

எனது இல.2/9/772(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7
1980, யூலை மாதம் 03 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

## மதுபோதை அல்லது மதுநாற்றம்.

தாபனக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் உப பிரிவு 6.5ஐ உடனடுத்து, அதன் கீழே மேல்வரும் புதிய பிரிவு சேர்க்கப்படுகின்றது.

7. மதுபோதை அல்லது மதுநாற்றம்.

7.1 ஓர் உத்தியோகத்தர் கடமையில் இருக்கும் போது மதுபோதையில் அல்லது மதுபோதை உடையவராய்க் காணப்படுவது அவரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தும்.

7.2 மதுபோதையில் இருக்கும் போது இழைத்த தவறுக்கு குற்றவாளியாகக் காணப்படும் உத்தியோகத்தர் நீதி மன்றத்தில் முதல் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

7.3 மதுபோதை அல்லது மதுநாற்றமுடைத் தவறு தொடர்பான திணைக்கள விசாரணை ஒன்றில் பதவிநிலை வரிசையிலுள்ள இரண்டு சிரேட்ட உத்தியோகத்தர்களின் சான்றுகள் ஓர் உத்தியோகத்தர் குற்றவாளி என்பதைத் தாபிப்பதற்குப் போதுமானவை. அவ்வாறு குற்றவாளியாகக் காணப்படும் அரசாங்க உத்தியோகத்தர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

02. தாபனக் கோவையிற் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் காலகதியில் வெளியிடப்படும்.

ஒப்பமிட்டவர். டி. பி. ஜ. பீ. எஸ்.
சிறிவர்த்தன.
செயலாளர்.
அரசாங்க நிருவாக அமைச்சு.